செ.வெ.எண்:21/ஜீன் நாள்: 17.06.2021

**தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் 1430 ஆம் பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டாட்சியர் அலுவலகத்தில் 1430 ஆம் பசலி ஆண்டுக்கான வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதன்படி, வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) முதல் நாள் நிகழ்ச்சியில்(16.06.2021) புலிக்கரை, செல்லியம்பட்டி தொகுதி, வரகூர், கொல்லஅள்ளி தொகுதி , போத்தலஅள்ளி ,செக்கோடி, பூகான அள்ளி, காட்டன அள்ளி தொகுதி, குத்தலஅள்ளி, போலபகுத்தன அள்ளி, சிட்டிகானஅள்ளி, பாப்பிநாயக்கன்பட்டி தொகுதி, செட்டிஅள்ளி, தோமலஅள்ளி, போதுகுல அள்ளி,பத்தமஅள்ளி, நேரலமருதஅள்ளி ,கருக்குமாரனஅள்ளி ஆகிய கிராமங்கள், இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் (17.06.2021) ஜெர்தலாவ், என்ரனஅள்ளி , பி.செட்டிஅள்ளி , கரகதஅள்ளி, பாலக்கோடு, பேளாரஅள்ளி, சிக்கார்தன அள்ளி,பெலமாரன அள்ளி, நல்லூர் தொகுதி, கனவேனஅள்ளி, பூதி அள்ளி, திருமல்வாடி, பேவுஅள்ளி, சீரியனஅள்ளி தொகுதி, எர்ரகுட்டஅள்ளி,சீராண்டபுரம், பொப்பிடி, எருதுகுட்டஅள்ளி, தண்டுகாரன அள்ளி,செங்கள் பசவந்தலாவ்,புலிக்கல், ஆகிய கிராமங்கள் கணக்குகளை தணிக்கை செய்தார்.

அதனைத் தொடர்ந்து மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் (22.06.2021) அத்திமுட்லு,சாமனூர்,கொரவாண்டஅள்ளி தொகுதி (கெண்டேன அள்ளியின் ஒரு பகுதி) பஞ்சப்பள்ளி,சினனே கவுண்டன அள்ளி, சூடனூர், சிக்கமாரண்டஅள்ளி தொகுதி, சென்னமேனஅள்ளி, மாரண்டஅள்ளி,கொரவாண்ட அள்ளிதொகுதி (கெண்டேன அள்ளியின் ஒரு பகுதி),பெலகாபுரம் தொகுதி, (கௌண்டேன அள்ளியின் ஒரு பகுதி) சிக்கதோரணப்பெட்டம், பெரியானூர் தொகுதி, கோதிகுட்லஅள்ளி (போடிகுட்டபட்டி), குற்றார,அள்ளி தொகுதி, ரங்கப்பட்டி, உப்பாரஅள்ளி ஆகிய கிராமங்கள்,நான்காம் நாள் நிகழ்ச்சியில் (23.06.2021) வெள்ளிசந்தை உள்வட்டம், பிக்கனஅள்ளி,வெலகல் அள்ளி,மகேந்திரமங்கலம், ஜிட்டாண்டஅள்ளி தொகுதி, கிட்டன அள்ளி, ஐக்கசமுத்திரம், திம்மராயனஅள்ளி தொகுதி,கருக்களஅள்ளி,மாரவாடி முருக்கல் நத்தம்,அண்ணாமலை அள்ளி ஆகிய கிராமங்களை சேர்ந்த பொதுமக்களிடமிருந்து இணையதளம் மூலம் உட்பிரிவு, குடும்ப அட்டை, பட்டதாரி சான்றிதழ், முதியோர் உதவித்தொகை, வாரிசு சான்று, உடல் ஊனமுற்றோர் உதவித்தொகை, விதவை உதிவத்தொகை உள்ளிட்ட மனுக்கள் இணையதளத்தின் மூலம் பெறப்படுகிறது.

இவ்வாறு பெறப்படும் தகுதியான மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இ.ஆ.ப., அவர்கள் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.மேலும், ”உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ் இணையதளத்தின் மூலம் பெறப்பட்ட மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும், சரியான முகவரி, தொலைபேசி எண்கள் இல்லாத மனுக்களை ஆய்வு மேற்கொண்டு சரியான மனுக்களை பெற்று தகுதியின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கவும் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட கிராமங்களை சேர்ந்த கிராம கணக்கு 13 பதிவேடுகளான அ - பதிவேடு, எப்.எம்.பி. பதிவேடு, அடங்கல், 1 - ஏ - உள்ளடக்கம், பட்டா மற்றும் புறம்போக்கு பதிவேடு, தனிபட்டா, சிட்டா மற்றும் போதுஅடங்கல், பண வரவு பதிவேடு உள்ளிட்ட பதிவேடுகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், தருமபுரி மாவட்டத்திலுள்ள 7 வட்டங்களில் 16.06.2021 முதல் வருவாய் தீர்வாயம் (ஜமாபந்தி) நடைபெற உள்ளது. எனவே, பொதுமக்கள் கொரோனா பெருந்தொற்று நோய் காலம் என்பதால் பொது மக்களின் நலன் கருதி ஜமாபந்தி அலுவலர்களிடம் நேரடியாக மனுக்களை அளிக்காமல் பொதுமக்கள் அனைவரும் தங்களது கோரிக்கை மனுக்களை https://gdp.tn.gov.in/jamabandhi/ என்ற இணைய வழியில் பொதுமக்களே சுயமாக மனு செய்து கொள்ளலாம்.மேலும், அரசு வகுத்துள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி, முககவசம் அணிதல், சமூக இடைவெளி கடைப்பிடித்து அரசு இ-சேவை மையம் மூலமாகவும் இணைய வழியில் மனுக்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம். பொதுமக்களின் மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு உடனடி தீர்வு காணப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ச.திவ்யதர்சினி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.கௌரவ் குமார் இ.ஆ.ப, துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி.பூமா, வட்டாட்சியர்கள் திரு.எ.அசோக்குமார் திரு.அன்பு ஆகியோர் உள்ளனர்

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.**